பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை -

07 09 2026 6 45

திங்கள்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மருந்துத் துறை சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு அனைத்து ஆதரவையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் ஆணவக் கொலைகளைத் தடுக்க விரைவில் சிறப்புச் சட்டம் இயற்றப்படும் என்று மாநில சமூகநீதித் துறை அமைச்சர் திரு வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

3. பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் மதுபானக் கடைகளை மாற்ற மாநில அரசு தயாரா இருப்பதாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைகத் துறை அமைச்சர் திரு விக்னேஷ் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் தவெக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களின் சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

மருந்துத் துறை சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு அனைத்து ஆதரவையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மருந்துத் தொழில் துறை தொடர்பான கண்காட்சியில் நேற்று பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியாவில் இந்த துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகக் கூறினார்.

மருந்துத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மத்திய அரசு ஊக்குவித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

புதிய மருந்துப் பூங்காக்களை மத்திய அரசு உருவாக்கி வருவதாகவும், மருத்துவ உபகரணங்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படுவதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஆணவக் கொலைகளைத் தடுக்க விரைவில் சிறப்புச் சட்டம் இயற்றப்படும் என்று மாநில சமூகநீதித் துறை அமைச்சர் திரு வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நேற்று இரவு செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பாக அமைக்கப்பட்ட குழு, அறிக்கை அளித்த பின்னர் இந்தச் சட்டம் இயற்றப்படும் என்றார்.

<<<<<>>>>>

மக்களுக்கு இடையூறாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படும் மதுக் கடைகளை மாற்ற அரசு தயாராக இருப்பதாக மாநில மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு விக்னேஷ் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிகள் மற்றும் ஆன்மீக தலங்களில் இருந்து குறிப்பிட்ட தொலைவு இடைவெளியில் தான் மதுக் கடைகள் இயங்கி வருவதாகக் கூறினார்.

இருப்பினும், இடையூறாக உள்ள கடைகளை மாற்ற பொதுமக்கள் அல்லது உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சரியான மாற்று இடத்தைச் சுட்டிக்காட்டினால், அக்கடைகளை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்று திரு விக்னேஷ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் தவெக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சென்னையில் தவெக நிர்வாகி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார். ஆளுங்கட்சியினருக்கே பாதுகாப்பில்லாத நிலைமை உள்ளதாகவும், தலைநகரில் பொதுவெளியிலேயே இப்படி ஒரு கொடூரம் நடப்பது அதிர்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் முடிந்த பிறகும் கூட, மக்கள் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு இதுவரை 200- க்கும் அதிகமான பாலியல் குற்றங்களும், கிட்டதட்ட 200 கொலைக் குற்றங்களும், ஆயிரக்கணக்கான போதைப்பொருள் தொடர்பான குற்றங்களும் நடந்துள்ளதாக திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமமுக பொதுச் செயலாளர் திரு டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவள்ளூரில் அடுத்தடுத்து ஏடிஎம் இயந்திரங்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

குற்றவாளிகளைக் கண்காணித்து கைது செய்யத் தவறியதே, இத்தகைய துணிச்சலை ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அப்பகுதி பொதுமக்கள் இரவு நேரங்களில் நிம்மதியாகத் தூங்கக்கூட அஞ்சும் சூழல் உருவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அடுத்தடுத்து அரங்கேறும் ஏடிஎம் கொள்ளைகளில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கண்டறிந்து கைது செய்ய வேண்டும் என திரு டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

போதை மற்றும் மதுக் கலாச்சாரத்துக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சார இயக்கத்தை தமிழகம் முழுவதும் மாநில அரசு நடத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஆயுதங்களுடன் கும்பல்கள் சுதந்திரமாகச் செயல்படுவது காவல்துறையின் மீதான நம்பிக்கையை சீர்குலைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

குற்றம் நடந்த பின்னர் நடவடிக்கைகளை எடுப்பது மட்டும் போதாது எனவும் குற்றங்கள் நடைபெறுவதற்கு முன்பே அவற்கை தடுக்கும் வகையில் செயல்பட

வேண்டும் என்றும் போதை மற்றும் மதுக் கலாச்சாரத்திற்கு தீர்வு காணவேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சிறந்த மாற்றத்துக்கான ஆட்சியாக தவெக அரசு செயல்படுதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறைந்துள்ளதாக கூறினார்.

சட்டப் பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்யப்படுவது பாராட்டத்தக்கது என்றும் இதன் மூலம் ஜனநாயகம் வலுப்படும் என்றும் திரு மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கிராம சபைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று மக்கள் நீதி மையத்தின் தலைவர் திரு கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் திரு விஜய்க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், கிராம சபைக் கூட்டங்களை, அடிமட்ட ஜனநாயகத்தின் அர்த்தமுள்ள அமைப்புகளாக மாற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

கிராம ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கான மதிப்பூதியத்தை உயர்த்த வேண்டும், கிராம சபை பற்றிய விழிப்புணர்வையும் பொதுமக்களின் பங்கேற்பையும் அதிகரிக்க வேண்டும், கிராம சபைத் தீர்மானங்கள் மீது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை திரு கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களின் சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று இரவு பரவலாக கனமழை பெய்தது.

காஞ்சிபுரம், தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலும் நேற்று மழை பெய்தது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் நேற்று மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இந்தோனேசியாவில் உள்ள அனக் கிரகடாவ் எரிமலை வெடித்துச் சிதறியதை அடுத்து ஜகார்த்தா சர்வதேச விமான நிலையத்தில் அனைத்து விமான சேவைகளும் நேற்று ரத்து செய்யப்பட்டன.

<<<<<>>>>>

குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், அசாம் மற்றும் மேகாலயாவில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

<<<<<>>>>>

மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ.பி. நட்டா, கிழக்கு திமோரில் இன்று நடைபெறவுள்ள தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் மண்டலக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளார்.

<<<<<>>>>>

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவராக திரு பகவத் பிரசாத் மக்வானாவும், துணைத் தலைவராக திரு கைஷப் பிஹாரியும் துணைத் தலைவராகவும் நியமிக்கப்படுவதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

தோஹாவிலிருந்து தில்லி வந்த இரு பயணிகளிடமிருந்து, தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த 134 வெள்ளி நாணயங்கள் உட்பட 484 நாணயங்களை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<<<<<>>>>>

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டப் பணிகளை மாநில பால்வளத் துறை அமைச்சர் திருமதி. விஜயலக்ஷ்மி ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தில் நிகழ்ச்சி ஒன்றில் உணவருந்திய 60 பேருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதை அடுத்து அவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<<>>>>>

திருவாரூரில் இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 10 பேர் காயமடைந்தனர்.

<<<<<>>>>>

காவலர் தினத்தையொட்டி, ராணிப்பேட்டையில் மாவட்ட காவல்துறை சார்பில், காவல்துறையினர் பயன்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கிகளின் கண்காட்சி நடைபெற்றது.

<<<<<>>>>>

காவலர் தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் சென்னை பெருநகர காவல்துறை சார்பில் காவல் வாத்தியக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<<>>>>>

சென்னையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் சுமார் 40 டன் தேவையற்ற பழைய வீட்டு உபயோக பொருட்கள் பெறப்பட்டு அழிக்கப்பட்டதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

திருவாரூரில் தமிழ்நாடு டேக்வாண்டோ சங்கம் சார்பில் மாவட்ட அளவிலான டேக்வாண்டோ போட்டி நடைபெற்றது.

150 பேர் பங்கேற்ற இப்போட்டியில் 60 பேர் மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்றனர்.

<<<<<>>>>>